உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி உரு] பிரபவ-ஹூ சித்திரைமீ [பகுதி சு.
Vol. XXV. April-May-1927. No. 6.

## கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[கரு உ-ம் பக்கத் தொடர்ச்சி.]

### ஆரணியகாண்டம்

[இராமன் தண்டகாரணியத்திற்சேர்வது முதலிய செய்திகளைக் கூறுவது.]

---

### விராதன் வதைப்படலம்.

#### கடவுள்வாழ்த்து.

354. பேதி யாது நிமிர் பேத உரு வம்பி றழ்கிலா,
ஓதி ஓதி உண ருந்தொறும் உணர்ச்சி உதவும்,
வேதம் வேதியர் விரிஞ்சன் முத லோர் தெ ரிகிலா
ஆதி தேவரவர். எம் அறிவி னுக்க றிவரோ,

இ - ள். (சூக்குமமாயிருந்த ஐம்பெரும் பூதங்களை அவற்றின் தன்மை) வேறுபடாமலே (தூலமாகத்தோன்றி) வளருகின்ற பலவேறு வகைப்பட்ட (சராசர வடிவங்களாகக் காரியப்படச்செய்து அவ்) வடிவங்களிலே (தாம் கலந்திருந்தும் தமது தத்துவாதீதத்தன்மை) மாறுபடா

தவரும், (சமயநூல்களை) மேலும்மேலும் படித்தீறியுந்தோறும் மெய்யுணர்வை (அதிகமதிகமாக) அளித்தருள்பவரும், வேதங்களும் வேதியரும் வேதன்முதலோரும் அறியமாட்டாதவருமாகிய ஆதிபகவனே எமது அறிவுக்கு அறிவானவர்.

பேதியாமை—"அனலின் வெம்மையும், நீரின்தண்மையும்போல அவ்வவற்றின் தன்மை அவ்வப்பொருள்களினின்றும் வேறுபடாதிருத்தல்". "பேத உருவம் என்றது - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்று சொல்லப்பட்ட சராசரரூபம்". 'கற்றதனாலாய பயன்' என்ற குறளுரையிற்போல, 'ஓதிஓதி' என்பதன் முன் 'நூல்கள்' சொல்லெச்சமாக வருவித்துப் பொருள்கூறப்பட்டது. உணர்ச்சி, மெய்யுணர்வாகிய தத்துவஞானத்தைக் குறித்தது. "வேதமென்பதற்குச் செய்யவேண்டிய விதிகளையும் விலக்கவேண்டிய விலக்குக்களையும் அறிவிப்பதென்பது பொருள்". "வேதியர்......அவை விதிக்கின்ற நெறிக்கண்ணே ஒழுகுவோர்". விரிஞ்சன் - பிரமன். பிறழ்கிலா(த), உதவும், தெரிகிலா(த) ஆதிதேவரென இயைக்க. "எம், ஈண்டுத் தனித் தன்மைப்பன்மை; கவிஞர் இங்ஙனங்கூறுதல் மரபு. இனி, உலகினரையுந் தம்மொடுகூட்டியுரைத்தாரெனினும் அமையும்". பிறழாத என்னும் பொருளுடைய 'பிறழ்கிலாத' என்பதில் 'கில்' பொருள் குறியாத இடைச்சொல்லாகவும் தெரியமாட்டாத எனப் பொருள்படும் 'தெரிகிலாத' என்பதில் 'கில்' ஆற்றலுணர்த்தும் இடைச்சொல்லாகவும் நிற்கின்றமை காண்க. 'அவர்,' பகுதிப்பொருள் விகுதி.

'ஓதிஓதி உணருந்தோறும் உணர்ச்சி உதவும்' என்பதை 'வேத'த்துக்கு விசேடணமாக்கிப் "பலமுறை பாராயணஞ்செய்து ஆசார்யோபதேசத்தாலே உளங்கொண்டபொருள்களைச் சிந்தித்துத் தெளியும்பொழுதெல்லாம் மெய்யுணர்வை மேலும்மேலும் கொடுக்கின்ற வேதம்" என்றும், 'ஆதிதேவ'ருக்கு அடையாக்கித் "தமது திருநாமங்களைப் பலமுறை உச்சரித்துத் தியானஞ்செய்யும்பொழுதெல்லாம் தத்துவஞானத்தைக் கொடுக்கும் ஆதிதேவர்" என்றும் பொருள்கூறுவர்.

மேலே எடுத்துக்கூறிய உரைப்படி இரண்டாம் அடியையன்றி முதலடியையும் வேதம் என்பது கொண்டு முடிவதாக்கி "(மூலமாய நூன்

தனது இயற்கை) மாறுபடாமல் (மேலே கிளைத்து) வளர்ந்த (சாகைக ளான) பலவகைப்பட்ட (அங்க) வடிவங்கள் (தன்னுடனும் அவைதம் முள்ளும்) மாறுபடுதல் இல்லாத வேதம்' என்று பொருள்கொள்ளலாம்.

உயிர்களின் அறிவு தானாகஅறியாமல் இறைவன்அறிவிக்க அறிவ தாதலால் இறைவனை 'எம்மறிவினுக்கறிவு' என்றார்.

"எம் அறிவினுக்கு அறிவு என்றது 'பத்துடை அடியவர்க் கெளியவன் பிறர்களுக் கரிய வித்தகன்' என்றவாறு பத்தாகிய எமக்கு அறியப்படுமவ னென்றபடி. அறியப்படு பொருளை 'அறிவு' என்றது, ஆகுபெயர். அரோ ஈற்றசை."

[பரதன் முதலியோர் விடைபெற்றுச்சென்றபின்பு, இராம லக்குமணர் சீதையுடன் அத்திரிமுனிவனது ஆச்சிரமத்தை அடைந்து அவனை அடிபணிந்தார்கள். அவன், தனது உற்றா ரனைவரும் ஒருங்கே உற்றாற்போல, உவகை மீக்கூர்ந்து, "நீங்கள் இவ்வளவுதூரம் வந்து காட்சி அளித்தது இங்கேயுள்ள முனிவர்களுக்கு எளிதிற் கிடைப்ப தன்று; அது, எங்களில் யாவர் செய்த தவப்பயனோ, அறியேம். உங் கள் அருமையான வருகையானது, இமையோர் முதலிய எல்லா உலகத் தோரும் ஒருங்கு வந்ததை ஒக்கும்." என்று மனமுருகி முகமன் மொழிந்தான். அன்று அந்த ஆச்சிரமத்தில் அமர்ந்து, அங்கே திரிமூர்த்திகளையும் சிசுக்களாகச்செய்த அரிய கற்புடைய அநசூயை ஆகிய அம்முனிவனது மனைவி ஆடையாபரணதிகளால் அலங்காரஞ் செய்யப்பெற்றிருந்த சீதையுடன் மறுநாள் இராமலக்குமணர் தண்டக வனத்தைச் சார்ந்தார்கள்.

அவர்கள் அந்த வனத்தில் அடிவைத்த உடனே, விராதனென் னும் இராக்கதன் எதிர்ப்பட்டான். அவன் மண்ணிலுள்ளானெனி னும், விண்ணிலுள்ள தேவர் கண்ணிலும் கருத்திலும் உள்ளா னென் னும்படி, அவர்களுக்கு அவனிடத் துண்டான அச்சத்தினால் அவர்கள் எப்போதும் அவனையே நெஞ்சில் நினைந்து அவன் உருவெளித்தோற் றத்தை அகலாது கண்ணிற் காணுவாராயினர்.

அவன், இராமலக்குமணரை நோக்கி "நில்லுங்கள் நில்லுங்கள்" என்று சொல்லி அதை அவர்கள் கேட்குமுன் சீதையை எடுத்து விண் வழிச்சென்றான். அவர்கள் சீறித் தோளிலிருந்த வில்லை இடக் கையிற் பிடித்துத் தூணியிலிருந்த அம்பை வலக்கையில் எடுத்துப் போர் செய்யப் புகுந்து "அடா! இது வஞ்சனை! திரும்பு!" என்றார்கள். அவன் "உங்கள் அம்பு என்னை என் செயும். யான் அம்பில்லாமலே எல்லா உலகங்களையும் வெல்லுவேன். எளிதிற் கொல்லக்கூடிய உங்களைக் கொல்லாது விட்டு உங்களுக்கு உயிர்தந்தேன். இவளை விட்டுப் போங்கள்" என்றான். இராமன், இவன் போரென்ப தறியான்; தெரிவிப்பேன் என்று, வில்லை வளைத்து, நாணேற்றிக் குணத்தொனி செய்தான். கரிய இராமன் தெறித்த நாணொலி கார்மேகம் இடித்த இடி போலக் கேட்டு, விராதன் இவன் எளியனல்ல னென்றெண்ணிப் பூனை வாயிற் புகுந்த கிளிபோலக் கதறும் சீதையைப் பூமியில் விட்டுக் கோபத்தோடு கொடிய சூலாயுதத்தை எறிந்தான். அதனை இராமன் ஓரம்பால் இரண்டு துண்டங்களாகக் கண்டித்து வீழ்வித்தான். அவன் மலைகளை வேரோடு பேர்த்து ஒன்றின்பி னொன்றாக விசையாக எறிந்தான். அவைகள், இராமன் விட்ட அம்புகளால் தாக்குண்டு திரும்பி விராதன்மீது விழ, அவைகள் வீழ்ந்த இடங்களெல்லாம் ஆழ்ந்த காயங்களாயின. மலைகளாற் பயனில்லை யென்று ஒரு மராமரத்தை ஒடித்து இராமனைப் புடைக்க எதிர்த்து வந்தான். அதனை இராமன் ஓர் அம்பால் அறுத்தெறிந்து அவன் தோளிலும் மார்பிலும் அழுந்தும்படி பல அம்புகள் விட்டான். முள்ளம்பன்றி தன் உடலில் முளைத்த முள்ளுகள் பலதிசைகளிலும் சிதறும்படி உதறுஞ்செயல்போல, அவன் தன் உடம்பை விசையாகக் குலுக்கி அவ்வம்புகளைத் தெறித்தோடச் செய்தான். அழுந்த விட்ட அம்புகள் அவ்வாறாகக் கண்ட இராமன், அவன் உடம்பை ஊடுருவிப் போகும்படி வேறு சரங்கள் விட்டான். அதனால் அருவி வழியும் பெரிய மலைபோலக் குருதி சோர நின்ற அவன் உணர்வு சோரக் கண்டு, இராமனும் இலக்குமணனும் இவன் கைகளிருந்தால் இன்னும் போர் புரிவானென்று, அவைகளை வெட்டி விடுவமென்று, தம் வாளை யுருவிக்கொண்டு அவன் தோளிலேறினர். அப்போது அவனுக்கு உணர்வு திரும்பிவர, அவர்களைச் சுமந்தபடியே

சுற்றித் திரிந்தான். அவனது சோரி சோரும் பாரமேனி மேரு நேர, வீரிருவ நும் மேரு மீது சாரிபோகும் சூரிய சந்திர ரொத்தனர்.

சீதை, சேவல் பிடியுண்ட அன்னம்போலப் புலம்பி விழுந்து, திரும்ப எழுந்து, தொடர்ந்து நடந்து, "என்னை உண்டு அவர்களை விடு" என்று இரந்தாள். அவள் துன்புறுதலை இலக்குமணன் கண்டு, சீதை துயர்கூர நீ விளையாடலாமோ, இவனை விரைவிற் கொல்லல் வேண்டுமென, இராமன் அவனைக் காலால் உதைய அவன் கீழே விழுந்தான். இரு வீரரும், அவன் விழும்போது அவன் தோள்களை வெட்டிவிட்டுத் தூரமாகக் குதித்தார்கள். அவன் கடுங்கோபங்கொண்டு இரண்டு தோள்களை ஒரு பாம்பு அடுத்தாற்போல, அவர்களை அடுத்தான். இராமன் இவனைப் புதைத்துவிடுவோமென, இலக்குமணன் குழிதோண்ட, அந்தக் குழியில் விழும்படி, அன்பர் கருதியதைக் கருதியவாறே அருளும் திருவடிகளால் இராமன் விராதனை உதைத்து வீழ்த்தினன். வீழ்த்தவே, அவன் தன்னை இராக்கதனாகும்படி குபேரன் கொடுத்த சாபம் தீர, முட்டையுள்ளிருந்து பறவை வெளிப்படல்போல, இராக்கத சரீரத்தினின்று திவ்விய தேகியாய் வெளிப்பட்டு, முன்னைப் பிறவி நினைவு முற்றும் உறப்பெற்று இராமனைத் தோத்திரஞ் செய்வானானன்.]

### விராதன் இராமனைத் தோத்தரித்தல்.

355\. "வேதங்கள் அறைகின்ற, உலகெங்கும் விரிந்தன, உன்
பாதங்க ளிவை, என்னில், படிவங்கள் எப்படியோ!
ஓதங்கொள் கடலன்றி, ஒன்றினோ டொன்றொவ்வாப்
பூதங்கள்தொறும்உறைந்தால், அவைஉன்னைப்பொறுக்குமோ"

இ-ள். "(என்மேல் ஏறியும் உதைத்தும் என்னைத் தீண்டியதனால் என்னைக் கடைத்தேறச் செய்த) உனது பாதங்கள் வேதங்களால் துதிக்கப்படுகின்றன. இப்பாதங்கள் இப்போது இவ்வளவு சிறியனவாய்த் தோன்றிடினும், முன் நீ திரிவிக்கிரமாவதாரம் செய்தருளிய காலத்தில்) உலகங்களெல்லாம் பரவி (அவைகள் அனைத்தையும் பொத்தி மறைக்கும்படி அவ்வளவு பெரிய பரிமாணமுடையனவா யிருந்த)ன வென்றால்,

(அப்படிப்பட்ட பாதங்களை அவயவமாக உடைய உனது முழுத் திரு) மேனி எப்படி (எத்துணைப் பரிமாணமுடையது) என்பேன்! (நீ வெளிப் படையாய்க் கடலிலே பள்ளிகொண்டு உறைகின்றாய். அந்தக்) கடல் (எதன் அம்சமோ, அதுவாகிய அப்பு) அன்றிப் (பிருதிவி முதலிய மற்றைப்) பூதங்கள் தோறும் (காந்து உறைகின்றாய். அப்படி) உறைந் தால், அப் பூதங்கள் உன்னைத் தாங்கவல்லனவோ! (உண்மையிலே தம்மைத் தாங்கும் கோபுரத்தைத் தாம் தாங்குவனவாகத் தோன்றும் பிரதிமைகள்போலப் பூதங்கள் உன்னைத் தாங்குவனவா யில்லாதத னோடு உன்னால் தாங்கப்படுவனவா யிருக்கின்றன; அப்படியிருக்கவும், அவைகள் உன்னைத் தாங்குவனவாகத் தோன்றுகின்றனவே; ஏனோ வெனில், அப் பூதங்களின் பெயரைத் தாமுங் கொண்டனவாய்ச் சடை யாற் செய்யப்பட்டு "விநோதமாகக் காட்டப்படும் சடைப் பூதங்களினுட் புகுந்த மனிதனே அவற்றைத் தாங்கிச் செலுத்துதல் போல, ஐம் பெரும் பூதங்களினுள் உறைகின்ற நீயே யவற்றைத் தாங்குகின்றா யென்பது)."

அறைதல், இங்கே புகழ்தல். சொல்லலும் அதன் பரியாய பதங்க ளாகிய அறைதல் பகர்தல் முதலியவைகளும் புகழ்தல் என்று பொருள் படப் பாட்டுக்களில் வருதல் பெருவழக்கு.

'வேதங்கள் அறைகின்ற' என்பது 'வேதங்களால் அறையப்படு கின்றன' என்ற பொருளில் வந்தது, 'நெடுமாற னடித்தார் அடிமாற னடித்தார்' என்னும் மடக்கில் 'நெடுமாறன் அடித்தார்' என்பது 'நெடு மாறனால் அடிக்கப்பட்டார்' என்ற பொருளில் வந்ததுபோல 'வேதங்க ளால்' என்பது ஆல் உருபு தொக்கு 'வேதங்கள்' என வந்தது. 'அறை யப்படுகின்றன' (அறை அ படு கின்று அன் அ) என்பது அகரச் சாரி யையும் படு விகுதியும் அன் சாரியையும் பெறாது 'அறைகின்ற' என நின்றது. 'பாதங்கள் இவை' என்பதில் இவை பகுதிப்பொருள்விகுதி.

'பாதங்கள் இவை' என்பது 'இந்தப் பாதங்கள்' என்று பொருள்படுவ தாகவுங் கொள்ளலாம். "தனது அருகிலிருப்பதுபற்றி 'இவை' என்று சுட்டினான்". படிவம்–உடல். 'படிவங்கள்' என்பதில் 'கள்' பன்மை விகுதியன்று, அசை: 'கைப்பொருள் கொடுத்தும்' என்ற சிந்தாமணிப் பாட்டில், 'பொய்ப்பொருள் பிறகள்' என்பதில் 'கள்' அசையாகநிற்றல் காண்க. 'கள்' அசையாகப் பல இடங்களில் வருதல் ஷெ நூலின் அரும்பத அகராதியிற் குறிக்கப்பட்டுள்ளது. ஓதம்–அலை; ஈரம்; வெள்ளம்.

"பூதங்கள்–பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்பன. நிலம்–நிலையாயிருத்தலும், கந்தமுடையதாதலும்; நீர்–பாய்ந்தோடுத லும், குளிர்ந்த பரிசமுடையதாதலும்; தீ–மேல்நோக்கி எரிதலும், சுடும் பரிசமுடையதாதலும்; காற்று—பத்துத்திசைகளிலும் வீசுதலும், உருவமின்றிப் பரிசமுடையதாதலும்; விசும்பு–எங்கும் பரவியிருத்த லும், சப்தகுணமுடையதாதலுமாகிய தன்மை வேறுபாடுகளைப்பற்றி, 'ஒன்றினோடொன்றுஒவ்வாப் பூதங்கள்' என்றான்."

இக் காண்டத்தின் முந்திய இரண்டுரைகாரரும் 'அறைகின்ற' என் பதை வினைமுற்றாகக் கொள்ளாமல் பெயரெச்சமாகக் கொண்டார்; அவ் வாறுகொண்டு, அதனை நேராகச் சொற்கிடக்கைமுறைப்படி 'உலகு' என்பதனோடு பொருத்தினால், பொருள் சிறவாதுபோதல் கருதி, மாறு கப் 'பாதங்கள்' என்பதனோடு வலிந்து பொருத்திப் பொருள் செய்தார்: அவர்கள், 'படிவம்' என்பதற்கு 'அவயவம்' என உரைகூறினர்; அதற்கு அப் பொருள் அகராதிகள் நிகண்டுகள் முதலியவைகளில் காணப்பட வில்லை; படிவத்தை அவயவத்துக்கு ஆகுபெயராகக் கொண்டார்போலும். அப்பொருள் சிறந்ததாகத் தோன்றவில்லை.

இந்த உரைக்கும் முந்திய இரண்டுரைகளுக்கும் உள்ள எல்லா வேற்றுமைகளையும் தெரிந்துகொள்ளும்படி ஒன்றோடொன்று பொரு

ளொற்றுமையுடைய அந்த உரைகளின் பொழிப்பை இதன் கீழே தருகின்றேன்:—

எல்லா வேதங்களாலும் துதிக்கப்படுகின்ற இந்த உனது திருவடிகளே உலக முழுதும் பரந்தனவென்றால், மற்றைத் திருவவயங்கள் எத்தன்மையனவோ? குளிர்ச்சியைக் கொண்ட கடலில்மாத்திரமேயல்லாமல், ஒன்றோடொன்று தம்மில் ஒத்திராத மற்றைப் பூதங்களிலும் (நீ) வாசஞ்செய்தால், அந்தப் பூதங்கள் உன்னைத் தாங்கவல்லனவோ? (வல்லனவல்ல.)

விராதன், யாருடைய பாதம் பட்டதனால் தன் சாபம் நீங்கிப் பூர்வ சென்ம ஞானம் வரப்பெற்றானோ, அந்த இராமனை நோக்கி, எங்குமுள்ள பரம்பொருள் அவனிடம் மூனைத்து நின்று அவன் பாத பரிசத்தால் தனக்குச் சாப விமோசனஞ் செய்தருளியதை நன்றியறிவுடன் நினைந்து, தனது சாபநீக்கத்துக்கு நேரான ஏதுவாகிய அந்தப் பாதங்களை அன்பொடு நோக்கி, அப்பாதங்களே, முன் திரிவிக்கிரம மூர்த்தியின் பாதங்களாய் மண்ணையும் விண்ணையும் அளந்தகாலத்தில் அவை முழுதும் வியாபித்தமையை நினைவுகூர்ந்து 'உலகெங்கும் விரிந்தன உன் பாதங்கள்' என்றான்.

அவ்வாறு வியாபித்த பாதங்களை நினையவே, அவற்றை உறுப்புக்களாக உடைய அவற்றினும் பெரிய உறுப்புக்கள் பலஉடைய முழு உடலம் எவ்வளவு பெரிதாயிருக்குமென்று பாவிக்கப் புகுந்து பாதங்கள் முற்றப் பாவிக்க முடியாதனவாயினும் ஒருவாறு பாவிக்க முயலவாவது இயலுவனவா யிருந்தவாறு—அவ் வுடலம் எவ்வாறும் பாவிக்க முடியாதிருந்ததை உணர்ந்து, அது இப்படிப்பட்டதென்று எண்ணவும் இயம்பவும் இயலாத தென்பது குறிக்க, 'படிவங்கள் எப்படியோ!' என்றான்.

விராதன், மெய்யுணர்வெய்தியபோது, தனக்குச் சாபநிக்கிரகஞ் செய்த பாதங்களை முதற்கண் நினைதல் இயல்பு. அவ் வியல்புபற்றிக் கம்பர் விராதனை அப் பாதங்களைத் துதித்தலை முதற்கட் செய்வானாக்கினார். ஆக்கியவர், அப் பாதங்களை அவன் முகமாகச் சிறப்பிப்பாராக, பாதங்களுக்குப் பிராசமென்னும் எதுகையாகவுள்ள 'வேதங்கள்' மனத்

தெழ, 'வேதங்கள்' என விராதனது தோத்திரப் பாட்டுக்களில் முத லாவது பாட்டைப் பாடத் தொடங்கி, 'வேதங்கள் அறைகின்ற' என அப் பாதங்களை விசேடித்து அவ் விசேடணத்தால் நிரப்பியதுபோக எஞ்சிநின்ற முதலடிப் பகுதியை, அப் பாதங்களின் மகத்துவத்தைப் புலப்படுத்தும் செயலாகிய 'உலகெங்கும் விரிந்தன' என்ற விவரணத்தால் நிரப்பியிருக்கின்றாரெனப் பாட்டுப் பாடும் வழக்கமுடையார் பாவனையிற் படுமாறு இப்பாட்டின் தொடக்கம் இருத்தல் காண்க.

ஊன்றிநோக்குமிடமெல்லாம் இவ்வாறு சிறந்த இயற்கையான பொருத்தமுடையனவாகக் கம்பர் கவிகளியற்றியிருத்தலைக் காண்பார், அவர் உலக கவிகளுள் உயர்ந்த மஹாகவிகளுட் சிறந்த பரம மஹா கவியெனற்பாலரெனப் பலமொழிப் பயிற்சியுடைய சில கம்ப ராமாயண ஆராய்ச்சியாளர் சாற்றுதற்குத் தக்க காரணங்கள் உளவெனக் கருதுவார்.

["முதலை காலைக் கௌவ, மூலமே! யென்றழைத்த மும்மத யானை க்கு முன் போந்துகாத்த மூர்த்தி நீயே அன்றோ! தக்க துணை வேறின் றித் தனக்குத்தானே துணையாய்த் தருமத்தைக் காக்குந் தயாபரனே! சருவசமயங்களுக்கும் அவரவர் ஆராதிக்கும் தெய்வங்களை அதிட்டித்து நின்று அத் தெய்வங்கள்வாயிலாக அருளுகின்ற சமயாதீத தற்பரனே! அத் தெய்வங்கள் உன்னைலன்றித் தாமே செய்யக்கூடிய தொன்றுண்டோ! பிரமாதி தேவர் முதலிய எல்லா உயிர்களுக்கும் தாயுண்டு, உனக்குத் தாய் உன்னையன்றி யுண்டோ! நீயே மும்மூர்த்திகளுக்கும் மூலமான முதற்பொருள்!

உலகத்துள்ள எல்லாச் சமயங்களும் உன்னையே பொருளாகக் கொண்டும் உன்னை அறியாதன—எல்லாச் சமயங்களும், மேலான வீட்டு நிலைக்களமாகிய உன்பாற் செலுத்தும் சோபானங்கள். அவ்வம் மதா நுட்டானங்கள் அவ்வச் சோபானப் படிகள். நீ சமயாதீதன். உன்னை அடைந்தவர் சமயங்கடந்தவரென்றபடி—அந்தச் சமயங்கள் அறியாத வாறு அவைகளுக்கு ஏனோ ஒளியாநின்றாய்; வெளியாய்நின்றால், தீங் குண்டோ? இந்த மாயாலீலை யேனோ?

கன்றுகள் தாய்களை அறியும்; தாய்கள் கன்றுகளை அறியும்: அவ் வாறாகத், தாயாகிய நீ கன்றுகளாகிய எல்லா உயிர்களையும் அறிந்திருக்க,

அவைகள் உன்னை அறியாதிருத்தல் ஏனோ? இதுவும் உன் மாய விளையாட்டே.

எல்லாத் தேவர்களும் தத்தம் வினை நீங்கத் தவமுயலாநிற்ப, நீயோ நீங்குதற்குரிய வினையில்லாயென்பது விளங்க உறங்காநின்றாய். உறங்கினும் உணர்வு நீங்காயாயுள்ளாய்!

உன் தேவியருள் நிலமகளை ஆதிசேடனாகத் தலையால் தாங்கினாய்; பன்றியாக எயிற்றினாலேந்தினாய்; கண்ணனாகக் கனிவாயால் விழுங்கினாய்; திரிவிக்கிரமனாகத் திருவடியாலளந்தாய்: இந்த ஓவாரமான செயல்களை மாற்றாளாகிய திருமகள் தெரிந்தால் சீற்றங்கொள்ளாளோ? (எயிறு-பல்; பன்றியின் பல்லாகிய கொம்பைக் குறித்தது).

நீ வேதங்களை வேதனுக்கு ஓதினாய். அவைகளை உனக்கு ஓதினாரொருவரையும் காணேம். அவர்கள் ஒழிந்துபோனாரோ?

அடியேனது அரிய தவத்தால் நீ க்ஷீரசாகரத்தினின்று நீங்கிவந்தாயாதலால், யான் சென்ம சாகரத்தினின்று நீங்கி உய்ந்தேனாயினேன்."

என்று துதித்த விராதனை நோக்கி, இராமன், "உன் வரலாறு கூறு" என, அவன், "என் பேர் தும்புரு; ஊர் அளகை. அங்கே நடனசாலையில் ஆடலோடு பாடல்செய்த அரம்பைமீது ஆசையுற்றேன். அதனால் குபேரன், கோபங்கொண்டு, என்னை 'அரக்கனாகப் பிறப்பையாக' என்று சாபங்கொடுத்து, அந்தப் பிறவி உன் திருவடி தீண்டத்தீரும் என்று சாபவிடையும் தந்தான். அவ்வாறே இராக்கதனாகப் பிறந்து, இன்றுவரையும் நன்றிது தீதிது என்று நாடியறியும் பகுத்தறிவின்றிப் பாவமே தேடினேன். நீயேன் தெரியாது திருவடிகளுக்குச் செய்த தீங்குகளைத் தாங்கியருள்க" என்று சாற்றிப்போனான்.

இராமன் முதலிய மூவரும் முனிவர்கள் வாழும் ஒரு சோலையை உற்று அங்கே அன்றைப் பகல் அமர்ந்திருந்தார்கள்.]

விராதன்வதைப்படலம் முற்றிற்று.

[தொடரும்]

வெ ப. சுப்பிரமணியமுதலியார்.

# ஒழுக்கம்.

மக்கட்சமுதாய வாழ்க்கைத்துறையின் ஒப்புரவறமே ஒழுக்கமாகும். தரணிதனிற் றலைக்கூடிப் பழகவேண்டாத் தமியரிடை ஒழுகலாறுள்ளற்கில்லை. பிறப்புமுதல் இறப்பிறுதி பிறர்தொடர்புநேராத தனிவாழுந் தமியரேதாம் ஒழுக்கறத்தின் உதவி வேண்டார், அதன்பயனும் அவசியமும் அறியகில்லார். கூட்டுறவை வேட்டொழுகு குடி குல நன்னாட்டவர்தம்மாட்டளவே அறத்தொகையும் அதன் வகையும் நிறைதழுவி முறைதழையக் கொழுகொம்பேற்கும்.

மக்களெல்லாம் பொதுவியல்பில் கூட்டுறவாஞ் சமுதாயவாழ்வுகக்குந் தன்மையுடையர். கூட்டுறவில்லாமாந்தர் நாட்டில் நாங் காணகில்லோம். தங்காடு தனிபாளுஞ் சிங்கமொடு தறுகண் மாவேங்கை பெனும் விலங்குகளுந் தமித்துவாழா. செருக்கி வாழ் யானையும் வெருக்கொளுமானும்போல் குழூஉப்படவாழுங் குலநலச்செவ்வியுணராவேனும், இனத்துணைவேண்டாச் சினப்புலியும் சிங்கமும் பிணைபொடுபோத்தும் பேணுதங் குருளையும் இணைந் தொன்றிவாழு மியல்பினையுடைய. தீதன்மை பலர்கூடித் திறம்படவாழ்வதென்றறியாச் சமுதாயவாழ்வு சகியாக் காதகமாந்தரும் 'காதன்மை கந்தா'ச் சிலரொடேனும் கலந்துவாழ்பவரே யாவர். ஒருவரின் ஒருவந்த உறைதலொன்றல்லால், இருவரும் பலரும் இணைந்தவாழ்வெல்லாம் கூட்டுறவேயாகும். எனைத்துக் கூட்டுறவுக்கும் ஒத்ததறிந் தொன்றியுறை ஒழுக்கநெறி இன்றியமையா உயிர்க்காற்றொக்கும். குறைநீத்து நிறை காத்து முறையாற்றுந் துறைமேற்கொண்டார்க்கல்லால், எனைவருக்கும் எவ்விடத்தும் எனைத்தளவும் எஞ்ஞான்றும் கூடிவாழ்தல் கூடாதாகும். தன்னுயிர்க்கின்னாமை தானறிவான் யாதொன்றும் மன்னுயிர்க்கின்னா செயலாற்றானாகவே, ஒப்புரவறிதலே மக்கள் முதற்பெருங் கடப்பாடாம். ஒத்ததறியாரே உடன்வாழவொல்லாராவர். பாடறிந்தொழுகும் பண்பிலார்மாட்டு ஒப்புரவு வேரூன்றுமாறில்லை; அதனாலவர்தம்முட் கூட்டுறவும் நிலைபெறாது. "யார்மாட்டும் பண்புடைமை" மக்களியல்வழக்காதலால், அப் "பண்புடையார்ப்பட்டுண்டுலகம்"; "அதுவின்றேல், அவ்வுலகியலே மாய்ந்தொழியும்" எனத் தமிழறநூல் வற்புறுத்துகின்றது.

"தக்காரினத்தாய்த் தாமொழுக" ஒல்லார்க்குச் சமுதாயவாழ்க்கை யில்லை. எனவே, ஒழுக்கம் மக்கள்கூட்டுறவின் முதற்கடனேடுறுதுணை யும் விழுப்பயனுமாகி நிற்கும். இக்கருத்தொடுபட்டே நல்லறம் பொது வகுத்தவள்ளுவரும், "ஒழுக்கமுடைமைகுடிமை" என்றேதியமையாது, "உலகத்தோ டொட்ட ஒழுகல்" எனவும் விதித்துச்செல்வர்.

தனியுறைதல் நிலைத்திணைக்கும், கூட்டுறவே இயங்குதிணை அனைத் திணுக்கும் அமைந்த இயலற ஒழுக்காம். நிலைத்திணைப்பொருள்கள் பால்வகைபிரிந்த பாண்மையிற்கூடி ஈன்றினம்பெருக்கு மியலுடைய வல்ல: இயங்குதிணைப் பல்லுயிரும் இருபாலிணைந்து இயற்குடி ஓம்பித் தம்மினம் வளர்க்குந்தகையவாதலால், இவற்றிற்குக் கூட்டுறவு இன்றி யமையா இயலறமாகும். இயங்குதிணை உயிரினங்கள்—உறுதல்முதல் ஊனுணர்வோடறுபுலன்கள்பெறுமளவும்—வான்முறையே நிரல்பட நல் வரிசைமுறை வளர்ந்துவரும் வகுப்புபர்வுவாய்ந்து நிற்ப. புலன் பெருகி நலமுயா, உயிரினங்கள் இயலடைவில் புணர்கூட்டுண்டுதவி இன மோம்பு திறன் முதிர வாழும். இம்முறையிற் றலைநிற்பார் மக்களாக, அவர் தம்முட் கூட்டுறவும் தலைநின்றேங்கும். கூட்டுறவு தழைத்துயா, ஒழுக்கறம் நன்னிலைக்களனும் திட்பமும்பெற் றெளிர்வதாகும்.

பாலியல் இறைவிளி பணிக்கக் கூடு மிருவர் குறைதேய நிறை பேணல் இல்லறமாம். அவர் கூட்டம் "அன்பும் அறனுமுடைத்தாயின், பண்பும் பயனு மது"வேயாம். அன்பிலார் தலைக்கூடார்: அறத்தொடு படார்தங் கூட்டுறவு அமைந்து நிலைபாது. அதுகொண்டே "அற னெனப்பட்டதே இல்வாழ்க்கை" என வற்புறுத்தப்பெற்றுளது; எனவே மாண்டகாத விருவரீட்டம் மனைபறத்தின் மதலையாகும்.

இனிக் காதல் காரணமின்றி, வினை ஒருமைத்துறை பலர்நின் றொன்றிவாழ்தலாற் சாதிகளும், புறப்பகையும் அகத்தகிலத்துறை தொறுமாந் துணைவிழைவுந் தூண்ட ஈண்டி வாழ்பவர்தங்கூட்டுறவாற் சமுதாயங்களும் எற்படுகின்றன. அவ்வத் தொழிற்றெகுதி சமுதாயக் கூட்டுறவுக் கான்ற நிறை ஒழுக்கறங்கள் அமையவேண்டும். துறை தொறும் நன் கறவுணர்ச்சி நிறுவாக்கால், உறவு நிலையாது. யாண்டும் மக்களியல் கூடிவாழுங்குணவயத்ததாகலான், அவர்தங் கூட்டுறவுக்குறு துணையாம் ஒழுக்கறமும் அப்பொதுக்குணத்திற் கியையவேண்டும். பொதுவற அமைந்த விதியறவொழுக்க மெதுவும் மக்கள்கூட்டுறவே பொருளாகக்கொள்ளாமற் பிறநோக்குங் கருதி நிற்கும்: அனைத்தளவில் அவ்வொழுக்காற்கூட்டுறவுப்பெருநலத்திற் குதவி குன்றும்.

பேதசமயவாதநோய்கள் பிணியாமல், அறவொழுக்கம் 'பரிந்தோம்பிக் காக்க'ப்படல் வேண்டும். கூட்டுறவு மக்கள்வகுப்பின் பொதுவியலாகவே, அதன் தொடர்புடை யொழுக்கமும் அவர்தம் மினவளாவளவில் நேர்பொதுமைநிதிநிலையம் நேடல்வேண்டும். 'சமயகோடிகளெலாம் எங்குந்தொடர்ந் தெதிர்வழக்கிடு'ந் தருக்குடைய. பொதுநலமும் போர்ச்செருக்கும் புணர்வதனால், இரண்டினுக்கு மினிமையில்லை.

மேலும், சமயங்கள் கடவுள்-உயிர்ச் சம்பந்தங் கருதிநிற்கும்: ஒழுக்கமோ மக்களினக்கூட்டுறவின் நலங்கருதி அவர்தம்முள் அறம் வகுக்கும். பசுவுயிர்கள் பதிபடையும் பாடாண்மை பாராட்டு மதங்களெங்கும்: மக்கள்குலநலம் வளர்க்க அவர்தம்முட் பொதுவாழ்வின் இயலுயர முழுதுதவும் ஒழுக்கம் என்றும். வழங்குவது வீடென முழங்குவன சமயம்: கூடியுறைமக்கள் பீடுபெற உதவுவதொழுக்கம். அம்மை அகவி இம்மையை இகழ்வ சமயம்: எம்மையு மிகழாது இம்மையைச் செம்மைசெய்வ தொழுக்கம். மறுமைமதப்பெருமிதத்தால் இகத்துண்மை மறுத்து இனிய வாழ்வினையும் வெறுப்பிக்குஞ் சமயம்: இயற்கைவளம் இறைவனுள மென வாழ்வை இகழாதாய் அனவரதநலநுகர உறவறத்தைமக்கள்தமக்குதவுவதே ஒழுக்கநோக்காம்.

இனநலத்தோடியைபுமுறை தனியுயிரைச் செம்மைசெய்யுஞ் சமயநெறி அறவொழுக்கோடொல்லாதல்ல. தனி உயிர்க்குப் பிறிதுலகே இன்பமெனத்தூண்டி ஈண்டைக் கூட்டுறவின்பெருநலத்தை அறை போக்கு மவ்வளவில் மதக்கோள்கள் ஒழுக்கறத்தோ டொன்றிநில்லா. பொதுவறமாம் ஒழுக்கத்தின் செம்முறைசேர் சமயநெறி நன்றாற்றும்; மதமருவிப் பிளவுவளம்பெற்றமையு மொழுக்கவகை அறத்தீதாம் பீழை செய்யும். மெய்ம்மதத்திற் கறவொழுக்கம் அருந்துணையாம்; பொருபல மதங்கள் ஒரு பொதுஒழுக்கப்பகையாய்நிற்கும்.

சமயச்சார்பில்லாத ஒழுக்கநிலை கொம்பற்ற கொடியதுபோல் வீழ்ந்தழியுமென்பார்க் கிந்நுரைப்பதுண்டு. அறவொழுக்கத் துறையினோடு மெய்ச்சமயமுறை முரணநேர்தற்கில்லை. இவைதம்முள் முரணின்றித் துணைநின்று நலமுதவ ஒன்றல் கூடும்; எனின் ஒருவாச் சார்பும் ஓவாத் துணையும் மதங்களிடை ஒழுக்கம் வேண்டா. தானே தன்னுறுகளனைத் தற்செய்து தற்காக்குந் தகைமாண்ட அறவொழுக்கிற் கதுவே சாலும்,

சண்டையிடுஞ் சமயங்கள்தரு முரணுர்விதிகளொடு சார்வதனுற் பொது வொழுக்கம் பொலிவதில்லை. கூடுபவர் பொதுநலத்தை ஒவ்வொருவர் தத்த முதற்கடனுகக் கடைப்பிடிக்கும் நல்லுணர்வு, கூட்டுறவின் அவசியத்தால் முளைத்து, நிதம் நுகர் பயனுல் விளைவதாகும். அவ்வுணர்வு வித்தாக, அறிவு மனுபவங்களுமே எருவொடு நன்னீராக, ஒன்று படு சமுதாயக் கழனிதொறும் ஒழுக்கக்கூழ் தழைவதாகும். பிறர்கிழமை தம்மதுபோற் பேணுவதும், உறுகடனின்றூற்றுவதும், ஒவ்வொருவர் தந்நலத்தை ஓம்புவதற் கடிப்படை யென்றுணரா ரில்லை. தாம் பேணு அறக்கடனைப் பிறர்சுமக்கக்கேட்பவர்கள் கூட்டுறவை வெறுத்தல் வேண்டும். கடனெலா மொருதலையுங் கிழமையெலா மறுதலையும் நிலையு மொருசமுதாயம் நிலைக்கொணுது இபலடைவில் 'தாமின்புறுவ பிறரின் புறக்கொண்டு ஏமுற நல்லறவொழுக்க மமைத்தாற்றல்' கற்றூர்போல் மற்றையருங் கருது மொருபொதுவியலாய்த் தந்நலங்கள் காமுறுவார் எல்லோருங் காமுறு பொன்னறநெறியா யமையுமன்றே. இது கொண்டே அகம் புற மென் றற மனைத்துந் தமிழ்மக்கள் வளம்பட முன் வகுத்தாற்றவைத்ததல்லால், சமயநெறிபுகுத்தி யறஞ்சமைக்க வில்லை. தலைப்புலவோர்தமிழறநூல் நிலவு நலமுடையவெலாம் பொதுமை வளம்பொலியு நிலைக்களனுகப் புனைந்த தல்லாற் சமயங்க ளெதனேடும் புணர்த்தி யறநெறிநிறுவிச் சமுதாயநலம் வளர்க்கப் புகுந்ததில்லை.

ஒழுக்கக்கூழ் மதநீரேற்றுயர்வதில்லை. சமயநிலம் அறவொழுக்க எருப்பெறுமேல் விளையுள்வளக் கொழுமை கொள்ளும். ஒழுக்கம் வேறுபடு சமயங்கள் வித்திவரும்விளையு ளில்லை; சமுதாயப்பொதுநலத்தின் முதலாகி முடிவி லதி லினிக்க முதிர் கனியுமாகும். ஒழுக்கமே பொது நலத்தின்காரணமுங் காரியமுமாகியமையும். அதுவேபோல் அம்மை பேசுஞ் சமயமன்று, மக்கட்சமுதாய இம்மைக்கூட்டுறவின்பமே ஒழுக் கறத்தின் முதலு மதன்விளைபயனு முடிவுமாகும். இவ்வாறு ஒழுக்கறமே சமுதாய 'நன்றிக்கு வித்தாகி', அதன்வளர்ச்சிக்கு 'மஃதே துணை நின்று, தூய தன் வளப்பத்துறைமுறைநீற்பார்க்கு 'விழுப்பம் தாலால், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படுவ'தொன்றும்.

ச. சோமசுந்தரபாரதி.

---

# ஸம்ஸ்க்ருதமும் தமிழும்.

உலகின்கண்ணே தோன்றிவிளங்கும் பற்பலபாஷைகளுள்ளும், ஆரியம் செந்தமிழ் என்னும் இருமொழிகளுமே பண்டைக்காலந் தொடங்கித் திரியாமல் நின்று இயலும் தெய்வத்தன்மை வாய்ந்தன என்பது மூதறிவாளரெல்லோர்க்கும் ஒத்த முடிபாகவுள்ளது. இந்த இரண்டுபாஷைகளும் ஒன்றோடொன்று இணைந்து நம்நாட்டில் வழங்கி வருவதிலிருந்து, இவை ஒரேதாயின்வயிற்றில் உடன் பிறந்து சிறந்த இரண்டு குழவிகள்போலுள்ளனவென்பது, ஒருவாறு தெளியலாகும்.

ஆனாலும், ஸம்ஸ்க்ருதம் அநாதிஸித்தமாகவுள்ளதென்றும், தமிழ் இடைப்பட்டகாலத்திற்றோன்றியதென்றுங்கொண்டு, இருமொழிகளையும் ஒப்புமையுடையனவாகச் சொல்லுதல் ஒவ்வாதென்று சிலர் கருதுவதுண்டு. அவர்கள், தமிழும் அநாதியான தன்மையுள்ள ஒரு தனிமொழியே என்னும் உண்மையை உணரல்வேண்டும். நாளடைவில் தமிழில் வடமொழிக்கலப்பு ஏற்பட்டமையால், அது ஸம்ஸ்க்ருதத்திலிருந்தே தோன்றியதென்னும் கொள்கை சிறிதும் பொருந்துவதாகத் தோன்றவில்லை. திராவிடபாஷையும் எக்காலத்திலும் உள்ளதென்பது,

"நின்றவனைவந்தநெடியோன் அடிபணிந்தான்
அன்றவனும் அன்பொடுதழீஇ அழுதகண்ணான்
நன்றுரைசெய்என்றுபலநல்லுரைபகர்ந்தான்
என்றுமுளதென்றமிழ்இயம்பியிசைகொண்டான்."

எனக் கம்பநாடர் இராமாயண அகத்தியப்படலத்துள் உரைத்ததனால் இனிது விளங்கும்.

சர்வேசுவரனுடைய ஸ்வரூபத்தைச் சொல்லுங்கால், அவன் பாஷைகளின் வடிவமாகவும் உள்ளவன் எனக்கூறுமிடத்து, ஆழ்வார், "தென்னன் தமிழை வடமொழியை" என்றும். "செந்திறத்ததமிழோசை வடசொல்லாகி" என்றும் அருளிச்செய்தார். இவற்றைப் பிரமாணமாகக் கொண்டு, பின்வந்த ஸ்ரீவைஷ்ணவசமயாசாரியர்களும், "செந்திறத்த தமிழென்கையாலே ஆகஸ்த்யமும் அநாதி" என்று தமிழின் நித்யமான

தன்மையை நிலைநாட்டியிருக்கின்றனர். அகஸ்தியமுனிவர் ஒரு காலத்தில் தமிழுக்கு இலக்கணம்வகுத்தார் என்று சொல்லப்படுவதால், இங்கே ஆகஸ்த்யம் என்றது அந்தத் திராவிடபாஷையைக்குறித்தது. இங்ஙனமே சைவசமயாசாரியர்களும் ஈச்வரனது ஸ்வரூபத்தைக்கூறுமிடத்து "ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்" எனவும், "செந்தமிழோ டாரியனைச் சீரியானை" எனவும் திருவாய்மலர்ந்தருளினர். இவற்றால், செந்தமிழும் ஆரியத்தோடொப்பப் பழமைவாய்ந்த ஒரு தெய்வமொழியே என்பது நன்கு தெளியப்படும். இது நிற்க.

வடமொழியிலக்கணம் பாணினிமுனிவர்க்கு இறைவனால் உபதேசிக்கப்பட்டதுபோலவே, தென்மொழியிலக்கணமும் அவரால் அகஸ்தியமுனிவருக்கு அருளிச்செய்யப்பட்டபெருமையுடையது. மார்க்கண்டேயர், வான்மீகர், கௌதமர் முதலான பெருமைபமைந்த முனிவர்களும் தமிழிற் செய்யுள்செய்தனரென்றும், அவையாவும் 'தலையாயவோத்து' என்று சிறப்பிக்கப்படுவன என்றும் அறியப்படுகின்றது. ஜமதக்னிமஹரிஷியின் புத்திரரான திருணதூமாக்னி என்னும் தொல்காப்பியமுனிவர் அகஸ்தியரின்மாணுக்கராய்த் தமிழ்மொழிக்கு முதன்மைவாய்ந்ததோர் இலக்கணநூலை இயற்றியுதவினர். இவர் ஐந்திரவியாகரணத்தை முழுவதுமுணர்ந்து தமிழிலக்கணம் செய்தாரென்பது தோன்ற "ஐந்திரநிறைந்ததொல்காப்பியன்" என்றுபாராட்டப்பெறுவர். தேவருஷியாகிய நாரதர் பஞ்சபாரதீயம் என்னும் இசைநூலையும், சிகண்டி என்னும் அருந்தவமுனிவர் இசைநுணுக்கம் என்னும் நூலையும், யாமளேந்த்ரர் என்பார் இந்திரகாளியம் என்னும் நூலையும் திராவிடபாஷையில் இயற்றி அதனைப் பெருமையுறச்செய்தனர். இவர்களைப்போலவே வடமொழியாளராய்த் தமிழ்மொழியை ஆதரித்த கபிலர், பிங்களர், தண்டி, காகபாஷிணி, கீரர் (க்ஷீர:) வாமனர் முதலான மற்றும் பலபுலவர்களும் உளர். அன்றியும், மூன்றுவகைச் சங்கத்தும் வீற்றிருந்து தமிழாராய்ந்தசான்றோர்களும், திருவள்ளுவர், கம்பர் முதலிய தெய்வப்புலவர்களும், ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலிய அவதாரபுருஷர்களும் ஆகிய இவர்களது அருமைபெருமைகளை அறியாதார்யாவர்? ஆக இவற்றால் தமிழும் ஸம்ஸ்க்ருதத்தோ டொருதன்மையாக எண்ணப்படும் உயர்வுடைய தென்பது நன்குவிளங்கும். இது பற்றியே,

"இருமொழிக்குங்கண்ணுதலார்முதற்குரவர்இயல்வாய்ப்ப
இருமொழியும்வழிப்படுத்தார்முனிவேந்தர்இசைபரப்பும்
இருமொழியும்ஆன்றவரேதழீஇயினார்என்றால்இவ்
இருமொழியும்நிகரென்னும்இதற்கையமுளதேயோ?"

என ஆன்றோரும் கூறுவாராயினர்.

இனி, ஸம்ஸ்க்ருதபாஷையானது வேதம், சந்தம், கற்பம், வியாகரணம், நிருக்தம், ஜோதிஷம், மீமாம்சை, தர்க்கம், யோகம், அறநூல், நீதிநூல், காமநூல், கணிதம், மருத்துவம், சிற்பம், பாதம் ஸங்கீதம் முதலிய பலவகைநூல்களாலும் நிரம்பப்பெற்றிருத்தலால், அங்ஙனமில்லாத தமிழ் அதனினும் மிகத் தாழ்ந்ததென்றுகூறுவதாயின், அது சிறிதும் பொருந்தாது; ஏனெனில் இத்தகைய நூல்கள் த்ராவிடபாஷையில் எக்காலத்தும் இல்லையென்று சொல்லுதல் இயலாததாகும்.

"ஏரணம்உருவம்யோகம்இசைகணக்கிரதம்ஜாலம்
தாரணம்அறமேசந்தம்தம்பம்நீர்நிலமுலோகம்
மாரணம்பொருளென்றின்னமான நூல்யாவும்வாரி
வாரணம்கொண்டதந்தோவழிவழிப்பெயரும்மாள"

என்னும் செய்யுளைநோக்குமிடத்து, அவையாவும், முற்காலத்திருந்து இக்காலத்து இறந்தொழிந்தன என்று கொள்ளவேண்டும்.

இன்னும், வடமொழியில் ஆக்கல் அழித்தல் ஆகிய ஆற்றல் அமைந்த மந்திரங்கள் அமைந்திருத்தல்போல, தமிழ்மொழியினும் அவை உள்ளன என்பது,

"நிறைமொழிமாந்தர்ஆணையிற்கிளந்த
மறைமொழிதானேமந்திரமென்ப"

என்னும் தொல்காப்பியச்சூத்திரத்தால் அறியப்படும்.

"ஆரியம்நன்றுதமிழ்தீதெனவுரைத்த
காரணத்தாற்காலக்கோட்பட்டானைச்—சீரிய
அந்தண்பொதியில்அகத்தியனார்ஆணையினாற்
செந்தமிழேதீர்க்கசுவாகா",

என்பது அச்சூத்திரவுரையில் மந்திரமென்பதற்கு மேற்கோளாக எடுத்தாளப்பட்ட செய்யுளாம். ஸம்ஸ்கிருதபாஷையே சாலச்சிறந்ததென்றும் தமிழ் அதனின் மிகத்தாழ்வுடையதென்றும் ஒருவன் ஆராயாது கூறினனாக, அக்காரணத்தால், நிறைமொழியாளரான தமிழ்ப்புலவரொருவரானையால் அவன் இறந்துபட்டனன். அங்ஙனம் இறந்துபட்டவனை மீண்டும் உயிர்ப்பிக்கும்பொருட்டு, போருளுடைய அப்புலவர்பெருமான் உரைத்த மந்திரப்பாடல் இது. இதன்பொருள் வெளிப்படை. நிற்க.

ஆரியமொழியினுள் வேதம் அமைந்திருத்தல்போலத் தமிழ்மொழியில் அஃதில்லாதகுறையைநினைந்து சிலர் தமிழிற்கு இழிவுரைத்தல் கூடும். அங்ஙனமாயின் அவர்,

> "ஆரியமுஞ்செந்தமிழுமாராய்ந்திதனின் இது
> சீரியதென்றொன்றைச்செப்பரிதால்—ஆரியம்
> வேதமுடைத்து தமிழ்திருவள்ளுவனார்
> ஓதுகுறட்பாவுடைத்து."

என்னும் ஆன்றோர் வாக்கினைச் சிறிது ஆழ்ந்து சிந்தித்தல்வேண்டும். இதன்பொருள், வடமொழியில் வேதம்போலத் தென்மொழியினும் திருவள்ளுவர் அருளிய திருக்குறள்நூல் உண்டாகையாலே, இருமொழியையும் சீர்தூக்கி ஒன்றின்ஒன்று சீரியதென்று செப்புதல் மிகவும் அரிது என்பதாம். இனி இச்செய்யுளைப் பொதுவகையாகநோக்குமிடத்து, இதிற் குறட்பாவைக்கூறியது, வடமொழிவேதத்தோடு ஒப்பஉயர்ந்த திருவாய்மொழிமுதலிய திவ்யப்ரபந்தங்களுக்கும் தேவாரம் முதலிய சைவத்திருமுறைகட்கும் உபலக்ஷணமென்று கொள்ளத்தகும். இச்சிறப்புப்பற்றியே பெரியாரும் இத்திராவிடபாஷையை, "ஞானத்தமிழ்" எனப் பாராட்டியருளினர். "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே" எனத் தமிழ்நூல்களுக்கும் பயன்கூறப்பட்டமையால், அந்தப்பாஷையைப் பயிலுவதினும் வடமொழியிற்போலவே புருஷார்த்த ஸித்தியுண்டென்பது நன்குபுலப்படும். இது நிற்க.

ஸமஸ்க்ருதபாஷை தென்னாட்டிலும்வ்யாபித்துச் சிறப்படைந்தாற்போல, த்ராவிடமும் முற்காலத்து வடநாட்டிலும்பாவி, வளர்ச்சியுற்றிருந்தது. வடதிசைக்கண்ணுள்ள யமுனாநதியைத் தொழுனை என்னும் தமிழ்ப்பெயரால் நூல்கள் வழங்குவதைநோக்குமிடத்து, ஒருகாலத்தில்

அவ்விடத்தும் சில தமிழ்மக்கள் குடியேறிவாழ்ந்துவந்தனரென்பது உய்த்துணரத்தக்கது. ஹிமவத்கிரியின் ஒருப்ரதேசத்தைக் குயிலாலுவம் என்னும்பெயராற் குறிப்பிட்டிருப்பதும் இதனையே வற்புறுத்தும். அன்றியும், மகதநாட்டுராஜதானியான ராஜக்ருஹம் என்னும் நகரத்தை வருணிக்குமிடத்துப் பெருங்கதை என்னும் உதயணகாவியத்துள்,

"ஐம்பதினிரட்டியவனச்சேரியும்
எண்பதினிரட்டிஎறிபடைப்பாடியும்
மன்பெருஞ்சிறப்பின்ஆயிரமாகிய
தலைப்பெருஞ்சேனைத்தமிழச்சேரியும்"

என வருகின்றது. இதனால், தமிழரது போர்வீரம் வடநாட்டரசராலும் மிகுதியாகப் போற்றப்பட்டு, அவர்நாடுகளில் தமிழ்ச்சேனைகளை ஏராளமாகக் குடியேற்றிவைத்துக்கொண்டிருந்தனரென்பதும் விளங்குகிறது.

அன்றியும், தமிழ்வேந்தராகிய சேரசோழபாண்டியர் இமயமலைவரை படையெடுத்துச்சென்று தமது வெற்றிப்புகழைப் பரப்பி, அம்மலையில் தமது இலாஞ்சனைகளாகிய வில், புலி, கயல் என்பனவற்றைப் பொறித்து, அந்தமலைப்ரதேசங்களையும் பரிபாலித்துவந்தனரென்று சொல்லப்படுகிறது. இதனை, "முடிமன்னர்மூவரும் காத்தோம்பு தெய்வ வடபேரிமயமலை" என்பதனாலறியலாம். பாரதயுத்தகாலத்திலும் தமிழரசர்கள் வடநாட்டிற்சென்று உதவிபுரிந்தனரென்பது சங்கநூல்களால் தெளியக்கிடக்கிறது. இவை மட்டுமன்று, இட்டாலி, க்ரீஸ் (Italy, Greece) முதலிய யவனரது தேசங்களிலும் நம் தமிழ்மன்னரது அரசாட்சி ஒருகாலம் பரவியிருந்தது என்பர். "வன்சொல் யவனர் வளநாடாண்டு, பொன்படு நெடுவரை புகுந்தோன்" எனச் சிலப்பதிகாரமும் ஒரு சேரஅரசனைச் சிறப்பித்துக்கூறுகின்றது. மிகப்பழைய தமிழ்நாட்டு நாணயங்கள் மேல்நாடுகளிற் சிலவிடத்துப் புதைபொருள்களோடு இக்காலத்தும் அகப்படுவனவாக ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். இன்னும், தமிழ்நாடாகிய தென்தேசத்தின் பெரும்பாகம் முற்காலத்தே கடலாற் கொள்ளப்பட்டு அழிந்தொழிந்ததென்னும் உண்மை புராதனசரித ஆசிரியர்களும் உடன்பட்டதொன்றும், ஆகவே

இவற்றானும் தமிழ்மொழியும் தமிழ்மக்களும் பண்டைக்காலத்து நாடெங்கும் பரவியிருந்ததன்மை நன்கு துணியப்படும். இங்ஙனமே இதற்கு ஆதாரமாகக் காட்டத்தகுவன இன்னும் பல உள. அவை எல்லாம் இங்குவிரிப்பிற் பெருகும். நிற்க

ஸம்ஸ்க்ருதம் மற்றும்பல ஆரியமொழிகள் தன்னிடம் தோன்றுவதற்கு அடிப்படையாய் இருந்ததுபோல, தமிழும் தெலுங்கு, மலையாளம், துளுவு, கன்னடம் முதலிய மற்றும் பல திராவிடபாஷைகளைத் தன்னிடமிருந்து தோற்றுவித்ததாகச் சொல்லப்படுவதுண்டு. இங்ஙனம் வடமொழியும் தென்மொழியும் வேறுபாடுடையவாய் இருவேறு கிளைகளைச்சார்ந்தனவாயினும், அவை, நகமும் தசையும் போல எக்காலத்தும் ஒன்றையொன்று விட்டுப்பிரியாத இயைபுடையனவென்று இருமொழியையும் நன்குபரிசீலனைசெய்த பண்டிதர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். ஆகவே இதுவரை சொல்லிய விஷயங்களாலும் மற்றும் பல காரணங்களாலும் தமிழ்த்தாயானவள், உலகத்து இலக்கணவரம்பின்றிப் பயின்றுவரும் ஆங்கிலம், உருது, ஈபுரு, அரபி, ருஷ்யம், டென்மார்க், ஜப்பான் முதலிய வேற்றுத்தேயமொழிகளையெல்லாம் வென்று, சிங்களம் சோனகம் சாவகம் சீனம் கூர்ச்சரம் வங்கம் குடகம் கொங்கணம் கலிங்கம் மகதம் கடாரம் கௌடம் முதலியவற்றையுந் தன்கீழ்ப்படுத்தும் தனியரசியாகி, தெய்வப்பழமை இனிமை பெருமை பொருள் இயல் பயன் என்பனவற்றால் வடமொழித்தெய்வத்தோடு சரியாஸனத்தில் வீற்றிருந்து விளங்குகின்றாள் என்பது ஐயமின்றித் தெளியப்படுவதால் நம்மவரனைவரும் தாய்மொழியாகிய தமிழ்மொழியைப் புறக்கணியாது இருமொழிப்புலமையும் நிரம்பப்பெற்று இன்பமெய்திவாழவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவன் திருவருளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

**P. V.** இராமஸ்வாமி,

வித்வான் முதல்வகுப்பு மாணவன்,

இராமேச்வரதேவஸ்தானம்ஸம்ஸ்க்ருதகாலேஜ்,

மதுரை.

# முன்னைத் தமிழ்நாட்டுப் பெண்களின் கற்புநிலை.

[கடுக-ம் பக்கத்தொடர்ச்சி.]

கந்தபுராணத்திலே சூரனுடைய மனைவியர்களுள் பதுமகோமளை யொழிந்தோர், அவன் இறந்தபொழுது எரிபுக்கதாகக் கூறப்படுவதினு னும், மணிமேகலை என்னும் நூலிலே ஆதிரை என்னுமொரு பெண், பொருளீட்டும்படி வணிகருடன் கலமேறிச்சென்ற தன் நாயகனைக் கல முடைந்து இறந்தானெனக் கேட்டபொழுது தன்கணவன் புக்குழிப் புகுமாறுகருதி,

"சுடலைக்கானிற்றொடுகுழிப்படுத்து
முடலைவிறகின்முளியெரிபொத்திப்"

புக்கனள் என்றும், புக்கபொழுது அவள் அவ்வெரியில் உடுத்தகூறை ஒள்ளெரியுறாமலும், ஆடிபசாந்தமும் அசைந்தகூந்தலிற்—சூடியமாலை யுந் தொன்னிறம் வழாமலும், விரைமலர்த்தாமரை யொருதனியிருந்த திருவின்செய்யோள்போன்று, தன்கணவனிறக்காத காரணத்தினால் தா னும் இறவாதினிதிருந்தாள் என்றும் கூறப்படுவதினாலும் தமிழ்நாட்டில் இவ்வழக்கிருந்தமை தெளியப்படும். இவ்வழக்கு வடநாட்டினுமிருந் தமை தசரதன்மனைவியர்களுள் பட்டத்துத்தேவியரொழிந்தோர் எரிபுக் கமையால் அறியப்படும். அன்றியும், மானின்குாலை இராமன்குா லெனமயங்கியசீதை எரிபுகுவேனென இலக்குவனுக்குக் கூறியதனானு மறியப்படும்.

3. தாபதநிலை:—உடனுயிர் துறக்காதும், எரிபுகாதும் தன்னுயிரைக் காத்து இந்நிலையளாதலின் இது கடையன் பெனப்படும். பிறநாயகரை விரும்பாது மறுமைக்கண், தன்நாயகனோடு உடனுறைவாழ்க்கையை விரும்பி இவ்விரதமநுட்டித்தலின், இதுவும் அன்பேயாம். விதவை

விரதி தலைமயிரை மழித்தும், வெள்ளையுடுத்தும், ஒருபோதுண்டும், வெற்றிலைபாக் குண்ணாதும், தரையிற் றுயின்றும், ஆடவர்முகத்தை நோக்காதும் தன்னாயகனையே சிந்தித்துக்கொண்டிருத்தல்வேண்டும். விதவைவிரதியினியல்பை மேற்கூறிய புறநானூற்றுச்செய்யுளையும் நோக்கி யுணர்க. இவ்விரதமநுட்டிக்கும் மகளிரை நந்தமிழ்நாட்டில் இன்றுங் காணலாம்.

இம்மூவகைநிலையுள் ஒருநிலையையடைதல் அக்காலப்பெண்களின் வழக்கு. தன் கணவன் கொலையுண்டானெனக் கேட்ட கண்ணகி மதுரையை யெரித்து வஞ்சிநகர்புக்கு மலைமேலேறி ஒரு வேங்கைமா நிழலிலே தன்னாயகனையேநோக்கிநின்று பதினான்காம்நாளிலே தெய்வ வடிவத்தோடுவந்த கோவலனைக் கண்டு களித்து அவனுடன் விமான மேறிச் சுவர்க்கம்புக்காள் எனச் சிலப்பதிகாரம் கூறலின், இம்மூவகை நிலையுள் ஒன்றும்வேண்டாததொரு தெய்விகநிலையை இம்மையிலேயே அவள் உடையவளாயிருந்தாளென்பது நாம் நன்குணரக்கிடக்கின்றது. அது பற்றியே மாதவி என்பாள்,—

"அத்திறத்தாளுமல்லணம்மாயிழை
கணவற்குற்றகடுந்துயர்பொறாஅள்
மணமலிகூந்தல்சிறுபுறம்புதைப்பக்
கண்ணீராடியகதிரிளவனமுலை
திண்ணிதிற்றிருகித்தீயழற்பொத்திக்
காவலன்பேரூர்கனையெரியூட்டிய
மாபெரும்பத்தினி"

யெனச் சிறப்பித்துக்கூறினள்.

இன்னும், கண்ணகி இம்மையிலேயே தெய்வத்தன்மையுடையவள் என்பதை, அவள் தன் ஒருகாற்சிலம்பைக் கையிலேந்திக்கொண்டு மதுரைவீதியிற்சென்றபொழுது அங்குள்ளார் அவளைக்கண்டு,

"செம்பொற்சிலம்பொன்றுகையேந்திநம்பொருட்டால்
வம்பப்பெருந்தெய்வம்வந்ததிதுவென்கொல்
ஐயரியுண்கணழுதேங்கியரற்றுவா
டெய்வமுற்றுள்போலுந்தகையளிதுவென்கொல்"

என்பனசொல்லியினைந்தேங்கியாற்றுதலினாலும், அவள் தன்வரவை அரசனுக்குணர்த்துமாறுசொல்ல, வாயிலோன் சென்று அரசனுக்கு,

"வெற்றிவேற்றடக்கைக்கொற்றவையல்லள்
அறுவர்க்கிளையநங்கையிறைவனை
யாடல்கண்டருளியவணங்குசூருடைக்
கானகமுகந்தகாளிதாருகன்
பேருரங்கிழித்தபெண்ணுமல்லள்"

எனக்கூறியதனானும் துணியப்படும். அன்றியும், இவள் கதிரோனை நோக்கிக் "காய்கதிர்ச்செல்வனே கள்வனோஎன்கணவன்" என்றவிடத்து அவன் அசரீரியாய்நின்று "நின்கணவன்கள்வனல்லன்; அவனைக் கள்வன் என்ற இவ்வூரை யெரியுண்ணும்" என்றமையானும், தீக்கடவுள் அவ ளேவல்வழிநின்று மதுரையை எரித்தமையானும் அது துணியப்படும். அவள் இம்மையிலேயே தெய்வநிலையுடையளானதற்குக் காரணம், பிற தெய்வம்பேணாது கணவனே தன்றெய்வமெனக்கொண்டு பேணி யொழு கினமையும், தன் கணவன்முகமன்றிப் பிறர்முகநோக்காமையும், அவன் விரும்பியதெதுவோ அதன்வழியொழுகினமையும் முதலாயினவே. அவள் தன்நாயகனையே தெய்வமாகக்கொண்டொழுகினாள் என்பதைத் தனக்கு "சோமகுண்டம் சூரியகுண்டம் துறைமூழ்கிக் காமவேள் கோட் டம் தொழுதார் கணவரொடு தாமின் புறுவர்" ஆதலின், யாம் ஒருகால் ஆடுது மென்ற தேவந்திக்கு, அக்கண்ணகி அது பீடன்றெனை (கனாத் திற-கூச-அடி) உரைத்தமையானும் தன்கணவன்முகமன்றிப் பிறர்முகம் நோக்காமையைத் "தவளவாணகைகோவலனிழப்ப" (அந்திமாலை-ருநும். அடி) என்பதனானும், அவன் விரும்பியதெதுவோ அதன்வழி யொழுகின மையை,—

"சலம்புணர்கொள்கைச்சலதியொடாடிக்
குலந்தருவான்பொருட்குன்றந்தொலைத்த
இலம்பாடுநாணுத்தருமெனக்கென்ன
நலங்கேழ்முறுவனகைமுகங்காட்டிச்
சிலம்புகொண்மெனை"க்

கொடுத்தமையானும் அறியப்படும். இங்கே "தவளவாணகைகோவல னிழப்ப" என்னும் அடிக்கு 'தானேபெறுகின்ற தவளவாணகையைக்

கோவலன் பெறாது இழப்ப' எனப் பொருள் கூறுக. கூறவே, கோவலன் பிரிந்தமையாலே நகையின்றியிருந்தாள் என்பது கருத்தாகும். இதுவே ஆசிரியர்கருத்தாதல் நுணுகிநோக்கினோர்க்குப் புலமாம். இவ்வாறன்றிப் பிறவாறு பொருள்கோடல் கண்ணகியின்கற்பைச் சிறப்பியாமையின், அஃது ஆசிரியர்கருத்தோடுமாறுபடும் என்க. யாங்கூறியதே பொருளாதல், முன்னும் பின்னுமுள்ள அடிகளின் வைப்பால் நன்குணரப்படும்.

இனித் தமிழ்நாட்டுப்பெண்கள் பெரும்பிரிவல்லாப் பிரிவின் கண்ணும் தம்மை யழகுசெய்யாரென்பதைக் கண்ணகியின் செயல் கொண்டேயறியலாம். கண்ணகி தன் நாயகனாகிய கோவலன் மாதவி யென்னும் பரத்தைவயிற்பிரிந்தகாலத்துத் தன்னை அழகு செய்யா திருந்தாளாதலின்; அதனை—

"அஞ்செஞ்சீறடியணிசிலம்பொழிய
மென்றுகிலல்குன்மேகலைநீங்கக்
கொங்கைமுன்றிற்குங்குமமெழுதாண்
மங்கலவணியிற்பிறிதணிமகிழாள்
கொடுங்குழைதுறந்துவடிந்துவீழ்காதின்
றிங்கள்வாண்முகஞ்சிறுவியர்பிரியச்
செங்கயனெடுங்கணஞ்சனமறப்பப்
பவளவாணுதறிலகமிழப்ப
.............................................................
மையிருங்கூந்தனெய்பணிமறப்ப"

என்பதனு னறிக.

அன்றியும், இராவணன் தன்னைத் தூக்கிக்கொண்டுசெல்லுங்காலத்துச் சீதையும் தன் னணிகளைக் கழற்றியெறிந்துவிட்டுச் சென்றாளென இராமாயணம் கூறுதலும் ஈண்டு அறியத்தக்கது. சீதை அணிகழற்றி யெறிந்தமையை,

"உமையரினுணர்த்துவதுளதென்றுன்னியோ
குழைபொருகண்ணினாள்குறித்ததோர்கிலம்

மழைபொருகண்ணிணைவாரியோடுதன்
இழைபொதிந்திட்டனள்யாங்களேற்றனம்"

(இரா—கலன். செய்யுள் 2)

என்னுஞ் செய்யுளானும், "தென்பரதவர் மிடல் சாய" என்னும் புறநானூற்று 238-ம் செய்யுளில் வரும்,

"கருந்தேரிராமனுடன்புணர்சீதையை
வலித்தகையரக்கன்வௌவியஞான்றை
நிலஞ்சேர்மதாணிகண்டகுரங்கின்
செம்முகப்பெருங்கிளையிழைப்பொலிந்தாங்கு"

என்னு மடிகளானு முணர்க.

இன்னும், தமிழ்நாட்டுப்பெண்கள் தம்நாயகனோடன்றித் தீர்த்த யாத்திரை விழா முதலியனவற்றிற்குச் செல்லாதிருந்தார்கள் என்பது, தேவந்தி தீர்த்தமாடவநம்படி கேட்டமைக்குக் கண்ணகி உடன்படாமையானும், மருதி என்னும் பார்ப்பனிக்குப் பூதசதுக்கத்துத்தெய்வம்,

"தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யும்பெருமழையென்றவப்
பொய்யில்புலவன்பொருளுரைதேறாய்
பிசியுநொடியும்பிறர்வாய்க்கேட்டும்
விசிபிணி முழவின்விழாக்கோள்விரும்பியுங்
கடவுட்பேணல்கடவியையாகலின்
மடவரலேவமழையும்பெய்யாது
நிறையுடைப்பெண்டிரகமேபோலப்
பிறர்நெஞ்சுபுகூஉம்பெற்றியுமில்லை
யாங்கவையொழிகுவையாயினாயிழை
யோங்கிருவானத்துமழையுநின்மொழியது"

எனக் கூறியதனானும் அறியத்தக்கது.

இன்னும், தமிழ்நாட்டுப்பெண்கள் தாம் பிறரை விரும்பி நோக்குதலன்றித் தம்மைப் பிறர்விரும்பிநோக்குதலும் தங்கற்பிற் கிழுக்கென

எண்ணியிருந்தார்கள். அதனைக் காவிரியாடிவரும் மருதியென்னும் பார்ப்பனியைப் பாங்கோரில்லாமையினாற் சகந்தன்சிறுவன் நீ வாவென்ன அம்மருதி கலக்கமுற்று,

> "மண்டிணிஞாலத்துமழைவளந்தரூஉம்
> பெண்டிராயிற்பிறர்நெஞ்சுபுகார்
> புக்கேன்பிறனுளம்"

என மாதுயரெய்தியதாக மணிமேகலை என்னும் நூலிற் கூறப்படுங் கதையானும், சிலப்பதிகாரத்திற்கூறியதாகப் பின்னர்க்காட்டப்படும், கல்லுருவமும் குரக்குமுகமும்பெற்ற பெண்களின்கதைகளானும் அறிக. இன்னும்,

> "வன்னிமரமுமடைப்பளியுஞ்சான்றாக
> முன்னிறுத்திக்காட்டியமொய்குழலாள்—பொன்னிக்
> கரையின்மணற்பாவைநின்கணவனாமென்
> றுரைசெய்தமாதரொடும்போகா—டிரைவந்
> தழியாதுசூழ்போகவாங்குந்திநின்ற
> வரியாரகலல்குல்மாத—ருரைசான்ற
> மன்னன்கரிகால்வளவன்மகள்வஞ்சிக்கோன்
> றன்னைப்புனல்கொள்ளத்தான்புனலின்பின்சென்று
> கன்னவிறோளாயோவென்னக்கடல்வந்து
> முன்னிறுத்திக்காட்டவவனைத்தழீஇக்கொண்டு
> பொன்னங்கொடிபோலப்போதந்தாள்—மன்னி
> மணன்மலிபூங்கானல்வருகலன்கணோக்கிக்
> கணவன்வரக்கல்லுருவநீத்தா—ளிணையாய
> மாற்றாள்குழவிவிழத்தன்குழவியுங்கிணற்று
> வீழ்த்தேற்றுக்கொண்டெடுத்தவேற்கண்ணாள்—வேற்றொருவ
> னீணோக்கங்கண்டுநிறைமதிவாண்முகத்தைத்
> தானோர்குரக்குமுகமாகென்று—போன
> கொழுநன்வரவேகுரக்குமுகநீத்த
> பழுமணியல்குற்பூம்பாவை—விழுமிய
> பெண்ணறிவென்பதுபேதைமைத்தேயென்றுரைத்த

நுண்ணறிவினோர்நோக்கநோக்காதே—யெண்ணிலேன்
வண்டலயர்விடத்தியானோர்மகட்பெற்று
லொண்டொடிநீபோர்மகற்பெறிற்—கொண்ட
கொழுநனவளுக்கென்றியானுரைத்தமாற்றங்
கெழுமியவளுரைப்பக்கேட்ட—விழுமத்தாற்
சிந்தைநோய்கூருந்திருவிலேற்கென்றெடுத்துத்
தந்தைக்குத்தாயுரைப்பக்கேட்டாளாய்—முந்தியோர்
கோடிக்கலிங்கமுடுத்துக்குழல்கட்டி
நீடித்தலையைவணங்கித்தலைசுமந்த
வாடகப்பூம்பாவையவள்போல்வார்—நீடிய
மட்டார்குழலார்பிறந்தபதிப்பிறந்தேன்"

எனத் தன்னாடாகிய காவிரிப்பூம்பட்டினத்திலே பிறந்தவர்களாகக் கண்ணகியாற் சொல்லப்பட்ட கற்பிற்சிறந்த பெண்கள் எழுவரின் சரிதத்தையும் நாம் உற்றுநோக்கும்போது நந்தமிழ்நாட்டுப் பெண்கள் தங் கற்புநிலையிலே மிக்க உறுதியுடையவர்களாயிருந்தார்கள் என்பது நன்கறியக்கிடக்கின்றது. அச்சரிதங்களுட் சில நன்குபுலப்படவில்லை. ஆதலிற் றெறிந்தவாறு கூறுதும். அவைவருமாறு:—

*1. காவிரிப்பூம்பட்டினத்தில் ஒருவணிகன் இருந்தான். அவனுக்கு ஒரேயொரு மகளுண்டு. அவளை அவன் தன் மருமகனுக்கே விவாகம்செய்துகொடுப்பதாக அவ்வூரிலுள்ளார்பலர்க்கும் சொன்னான். அவன் சின்னாளில் உயிர்துறந்தான். அதனைப் பொறாத அவன் மனைவியும் அடுத்த சிலநாட்களுள் இறந்தாள். அப்பெண்ணை மருகனுக்கே கொடுப்பதாக அவ்வணிகன் சொல்லக்கேட்டிருந்த சுற்றத்தார் மதுரையில் உள்ள ஒரு பெண்ணை விவாகம்செய்துகொண்டு அங்கேயே வசித்திருந்த அம்மருகனுக்கு ஓலை போக்கினர். அவ்வோலையைப் பார்த்த மருகனும் மிக்கதுன்பமுற்று அயலார் தேற்றத் தெளிந்து காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள மாமன்வீட்டையடைந்தான். அடைந்த அவனுக்குச் சுற்றத்தார் மாமன் கருதியிருந்ததைச் சொற்றனர். அவனும் அதற்கிசைந்து தான் அவளை மதுரையிற் கொண்டுசென்று அங்குள்ள

*இச்சரிதவிரிவு வீரபத்தினி என்னும் உரைநூலுட் கண்டது.

தன்சுற்றத்தார்முன்பு விவாகஞ்செய்துகொள்வதாக வாக்களித்து அச் சுற்றத்தார் சம்மதத்துடன் பெண்ணையும் பொருளையும் கொண்டு மதுரைநோக்கிச் சென்றான். சென்றவன் அன்றிரவு வழியிலுள்ள திருப்புறம்பயம் என்னும் இடத்திலே வன்னிமரமும் மடைப்பள்ளியும் கோயிலும் கிணறுமுள்ள வோரிடத்திலே தங்கினான். அன்றிரவு அவனைப் பாம்புதீண்டிற்று. அவன் உயிர் துறந்தான். அதனையறிந்த அப்பெண் பெருந்துயாமுற்று அழுதுகொண்டிருந்தாள். காலையில் அவ்வூரிலுள்ளாரும் அறிந்து மனமுருகினார்கள். அப்பொழுது யார்க்கும் தாமே துணையாகிய இறைவன் எழுந்தருளி அவளைக் கலங்க வேண்டாமென்றுகூறி, அவ்வணிகனைப் பார்த்தருளினார். அவனும் உயிர்பெற்றெழுந்தான். அப்பொழுது அப்பெண்ணும் அழுகையை நீங்கி உவகையடைந்தாள். உயிர்பெற்றெழுந்த வணிகன் தனக்கருள் செய்த இறைவனைப் புகழ்ந்து போற்றினன். அப்பொழுது இறைவன் அவ்வணிகனைநோக்கி இவளை இங்கேயே விவாகம்புரிந்துசெல் லென்றார். அதனைச் சிரமேற்கொண்ட வணிகன் இறைவனை வணங்கி யாருமில்லாத இவ்விடத்தில் நீரே யிதனைமுடித்துவைத்தல்வேண்டும் என்றான். அவன் வேண்டுகோட்கிரங்கி இறைவனும் அதனை முடித்துவைத்தார். வணிகனும் அவ்விளைய மனையாளுடன் இறைவனைப் பன்முறை வணங்கி விடைகொண்டு மதுரைசென்று மூத்தமனையாள் இருக்கும்வீட்டை யடைந்து இருவருடனும் வாழ்ந்திருந்தான். சிலகாலத்தில் அப்பெண் மகப்பேறும் அடைந்தாள். மூத்தமனைவிக்கும் மக்களுண்டு. மூத்த மனையாள்மக்களும் அவ்விளையாள்மகனுங்கூடி விளையாடினார்கள். விளையாடிவருகையில் ஒருநாள் மூத்தாள்மக்கள் தன்மகனை அடிக்கவே, அவர்களை அடக்கும்படி கருதி அவ்விளையமனையாள் சற்றுக் கடுகடுத்து அதட்டினாள். அதுகேட்ட மூத்தாள் கோபித்து அடிபேதாய்! நீ என் அருமை மக்களைவைதற்குத் தக்கவளா? நீ யாவள்? உன் ஊர்யாது? நின் தந்தை தாயர் எவர்? உனக்கு மணம் முடிந்தது எவர் முன்பு? நீ என் நாயகனுடைய அழகைக் கண்டு மயங்கிவந்த காமக்கிழத்தி யல்லையோ? உன் விவாகத்திற்குச் சான்றுண்டாயிற் காட்டுவாய்? அல்லையாயின் உன் வாயைமூடி யடங்குவாய் என்று கடுமொழிகளைக் கூறினாள். கேட்ட அவ்விளையாள், 'என் விவாகத்திற்குச் சான்றுகள் உள. அவை: திருப்புறம்பயத்திலுள்ள வன்னியும் கிணறும் இலிங்க

மும் மடைப்பள்ளியும்' என்றாள். மூத்தாள் 'உன்னால் என்னை ஏமாற்ற முடியாது, மெய்யாயின் அவற்றை இங்கே அழைத்துக்காட்டுக' என்றாள். அவ்விளையாள் தனக்கு இறைவனே துணையென்று நினைந்து சொக்க லிங்கப்பெருமான்சந்நிதியையடைந்து தன்கற்புக்குத் துணைசெய்யு மாறு பெருமானைப் பன்முறை பணிந்து வேண்டினாள். பெருமான் அவளுக்கிரங்கி அவைகளை அக்கோவிலின் ஒருபுறத்தே தோற்றுவித் தார். அவள் உடனே சென்று மூத்தாளை அழைத்துவந்து அவை களைக் காட்டினாள். அப்பொழுது அங்குள்ள பிறருங் கண்டு அவ்விளை யாளைப் புகழ்ந்தார்கள். மூத்தாளைக் கணவனும் பழித்தான். சாந்த குணமுடைய அவ்விளையாள் அவளை இகழாது தழுவிக்கொண்டாள். அன்றுமுதல் இருவரும் ஒத்து வாழ்ந்தார்கள்.

2. காவிரிப்பூம்பட்டினத்தின் கடற்கரையில் ஒருநாள் பலமகளிர் கூடிவிளையாடினார்கள். விளையாடும்பொழுது ஒருத்தியை மற்றையோர் பார்த்து அடி பெண்ணே! இதுதான் உனதுகணவன் என்று தாங்கள் செய்து விளையாடியதொரு மணற்பாவையைக் காட்டினார்கள். அவள் அதனை மெய்யென்றுநம்பி அப்பெண்களுடன் செல்லாது அப்பாவை யின்பக்கத்தே நின்றாள். அப்பொழுது திரையும் அப்பாவையைக் கரையாது சூழ்ந்துசென்றது. அதனைக் கண்டோர் அவளைக் கற் புடைத்தெய்வமென்று துதித்தனர்.

3. சோழன் கரிகாலன்மகள் ஆதிமந்தி யென்பாள் நீர்விழா வொன்றில் தன் கணவன் அத்தியுடன் நீராடுகையில் அவனைக் காவிரி வெள்ளங் கவர்ந்துகொள்ள இவள் அவனைக் காணாது பலவிடத்தும் தேடித்தேடிச் சென்று கடற்கரையிற் புலம்பிநின்றாள். கடலானது கற்பின்மிக்க அப்பெண்மணியின் ஆற்றாமைக் கிரங்கி அவனைக் கரையிற் கொண்டுவந்து விடுத்தது. அவளுடைய துயரத்தை அறிந்தவளும் நீராடிக்கொண்டிருந்தவளுமாகிய மருதியென்பாள் அச்சேரர்கோமானை அழைத்துவந்து ஆதிமந்தியோடு கூட்டினாள். ஆதிமந்தி களிப்புற்று அத்தியோடும் தன்மனையையடைந்து வாழ்ந்தனள்.

4. ஒருபெண், பொருளீட்டும்படி வேற்றுநாட்டுக்குக் கப்பலேறிச் சென்ற தன் நாயகன்வருகையைக் கடற்கரையிற்சென்று பார்க்க

விரும்பினாள். விரும்பிய அவள் தான் வெளியே செல்லில் நன்வடிவைப் பிறர்கண்டு காதல்கொள்வர் என்று கருதித் தனக்குக் கல்லுருவம் வரவேண்டுமென்று சிந்தித்தாள். கற்புடைமங்கையர்க்கு எதுதான் முடியாதது! உடனே கல்லுருவம் பெற்றாள். பெற்ற அவள் அவ்வுருவோடு கடற்கரைசென்று கணவன்வருகையை எதிர்பார்த்துநின்றனள். சிலநாட்கழிய அவனும் வந்தான். இவளும் கல்லுருவம்நீங்கிக் கணவனுடன் களிப்புற்று வாழ்ந்தாள்.

5. ஒருவனுக்கு இருமனைவிகளிருந்தார்கள். அவ்விருவருக்கும் இருபிள்ளைகள் உண்டு. ஒருபிள்ளை கிணற்றுள்வீழ்ந் திறந்தது. அப்பிள்ளையின்தாய் அதனைச் சகிக்காது பெரிதும் புலம்பினாள். அது கண்ட மற்றவள் எனது கணவனிடத்தில் என்னைப்போற் சமவுரிமை படைத்த மாற்றாள் பிள்ளையை இழந்து துயருற நான்மட்டும் பிள்ளையைவைத்துக்கொண்டு மகிழ்தல் முறையன்றென எண்ணித் தன் பிள்ளையையும் கிணற்றில் வீழ்த்தினாள். அப்பொழுது அவளுடைய கற்பின்நிலையினாலும் நடுவுநிலைமையாலும் இருபிள்ளைகளும் உயிருடன் நீரில்மிதந்துதோன்றின. தோன்றியவப்பிள்ளைகளை இருவரும் மகிழ்வோடும் எடுத்து மருவிவாழ்ந்தனர்.

6. ஒருபெண், தன்நாயகன் ஊரில் இல்லாதபொழுது ஒருவன் தன்முகத்தை விரும்பி நோக்குவதைக் கண்டாள். கண்டு பொருதவளாகி நாயகன்வரும்வரை தன்முகத்தைப் பிறர் நோக்காவண்ணம் குரக்குமுகமாகச்செய்தலே தகுதியென்றெண்ணி என்முகம் குரக்குமுகமாக மாறக்கடவது என்று நினைத்தாள். கற்பின்பெருமையினாலே அவள்முகம் குரக்குமுகமாகமாறினது. நாயகன்வரும்வரை அம்முகத்துடனிருந்து அவன்வந்தவுடன் தன்பழையவடிவடைந்து அவனுடன் வாழ்ந்தாள்.

7. இருசிறுமியர் மணலிற் சிற்றில்கட்டி விளையாடும்பொழுது ஒருத்தி மற்றவளைநோக்கி, "எனக்கு ஒருபெண்ணும் உனக்கு ஒரு ஆணும் பிறந்தால் நாம் அவ்விருகுழந்தைகளுக்கும் பருவத்திலே மணஞ் செய்துவைப்போம். அது உனக்கு உடன்பாடுதானா?" என்று கேட்க அவளும், உடன்பட்டனள். பின்னர் அவர்கள் பேசிக்கொண்டவாறே

குழந்தைகள் பிறந்தன. ஆண்குழந்தை முடமாகவிருந்தது. அவ்விரு குழந்தைகளும் வளர்ந்து மணப்பருவமெய்தியபொழுது முடவனுக்கு மணஞ்செய்துவைக்க விருப்பமில்லாத அப்பெண்ணின்தாய், தன்கணவனைநோக்கி முடவன்தாயும் தானும் விளையாடுங்காலத்திற் பேசிய அக்கதையைச் சொல்லி மனம்வருந்தினள். தாய்கூறியதைக்கேட்டுநின்ற அப்பெண்மணி, 'என்தாய்வாக்கின்படி யான் முடவனுக்கேயுரியள்; அன்றேல் என்கற்புக்கு இழுக்காகும்' என்று கருதிக் கோடியுடுத்துக் குழல்கட்டி மணக்கோலங்கொண்டு தாய்முன்வந்து தலைவணங்கிநின்றாள். அவள்கருத்தையுணர்ந்த தாய்தந்தையர் அவனுக்கே விவாகம் செய்துவைத்தார்கள். அவள்கற்பின்நிலையை யாவரும் புகழ்ந்தார்கள்.

மேலும், முன்னைத் தமிழ்நாட்டுப்பெண்களின்கற்புநிலை வேறுநூல்களானும் அறியக்கிடக்கின்றதேனும் ஈண்டு விரிப்பிற்பெருகுமென்றஞ்சியிவ்வளவில் விடுக்கின்றாம். இங்கேகூறிய பெண்களின்கற்புநிலையையுணர்ந்து இக்காலத்துப்பெண்களும் தங்கள்கற்புநிலையைநாட்டி நந்தமிழ்நாட்டுக்குப் புகழ்விளைவிப்பார்களாக.

இங்ஙனம்,

சி. கணேசையர்.

---

# இரங்கற்குறிப்பு.

நிகழும் பிரபவ-ஞூ சித்திரைமீ ருஉ (17-4-27) ஞாயிற்றுக்கிழமையன்று நம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினருள்ஒருவரும் திருச்சி நாஷனல் காலேஜின் தலைமைத்தமிழ்ப்பண்டிதருமாயிருந்த ஸ்ரீமத். ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் காலஞ்சென்றதுபற்றி மிகவும் வருந்துகின்றோம். இவர் ஆங்கிலப்பயிற்சியுடன் தமிழிலும் தக்கபயிற்சியுடையராய் அரும்பொருட்டிரட்டு முதலிய புத்தகங்களெழுதியும் தமிழ்ச்செய்யுள்களியற்றியும் தமிழ்ச்சங்கத்தில் பரீக்ஷகராயிருந்தும் தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகசபையங்கத்தினருள் ஒருவராயமர்ந்தும் தமிழ்ப்பத்திரிகைகள் நடத்தியும் தமிழில் நீண்டகாலம் உழைத்துவந்தவர். இவரது பிரிவுபற்றியபரிவு தமிழ்ச்சங்கத்தாராலும் தமிழ்மக்களாலும் பாராட்டத்தக்கது.

---

திருச்சி நாஷனல்கலாசாலைத் தமிழ்ப்புலவரும்

நச்சினார்க்கினியன்பத்திராசிரியருமாயிருந்த

ம. கோபாலகிருஷ்ணையரவர்கள்மீது பாடிய

# இரங்கற்பாக்கள்.

இன்றோதமிழையாதரிக்கும்சீரியோனையிழந்திடுநாள்
இன்றோமொழியின்பெயர்ப்பினலம் இன்றாயழிந்தேயொழிந்திடுநாள்
இன்றோநச்சினார்க்கினியன்என்னும்பெரியோன் இறந்திடுநாள்
இன்றோமறலிதமிழ்ச்சுவையூன்உண்டுகளிப்புற்றிடுநாளே.

மண்ணாட்டிற்றமிழ்வளர்ச்சியமையுமெனமதித்தனையோமற்றும்நீயவ்
விண்ணாட்டின் அதைவிரிக்கமேவினையோ உமதமுதம்மேவாதின்பப்
பண்ணாட்டுந்தமிழ்க்குவமையென்றுரைக்கப்பரிந்தனையோபாவியாண்டும்
எண்ணாட்டும்நச்சினார்க்கினியனைக்கண்டிடவிரும்பியேய்ந்தாய்கொல்லோ.

எக்காலும்முயற்சியொடுமேதாவதொன்றுரைத்தோஎழுதியேயோ
தொக்கார்கண்டுவந்திடநின்னுடல்பொருளாதியமூன்றும்சோர்விலாமல்
மிக்காரும்தமிழ்மொழிக்கேவிழைந்துதவும்மேன்மையினைவிதியிலாதேன்
எக்காலம்கண்டிடுவேன்கோபாலகிருட்டிணனேஎங்குச்சென்றாய்.

எங்கினியுன்னைக்காண்பேன்எக்கணம்நின்றனாவி
யிங்குறமீட்டும்வந்தேயங்குறமகவாய்காண்பேன்
பொங்குறும்பின்னதின்பம்புரிந்திடுபுலமைகேட்டற்
கெங்கினிபுறவேன்கொல்லோஏழையேன்என்செய்கேனே.

அறக்கொடியனவனையுலகோர்தருமனெனவுரைப்பரந்தோவந்தோ
நறைக்கமலநான்முகனும்நல்லாயுள் அளித்திலனேயந்தோவந்தோ
சிறக்குநடைமுதலானசெயலழிந்துசென்றனவேயந்தோவந்தோ
இறக்கவுமே அநியாயம் இதுவும்விதிக்கொடுமையேயந்தோவந்தோ.

நா. லக்ஷ்மீநரசிம்மையன்,
தமிழ்ப்பண்டிதர்,
ஹிந்து ஹைஸ்கூல், வத்தராயிருப்பு.